(5) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(இ) பர்மா பஜார் அகதிகள் கடைகள் அகற்றப்படும் என்பதான செய்தி குறித்து

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, 42-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அன்றையதினம் 27ம் தேதி நம்முடைய அரிஜன நலத் துறை அமைச்சரவர்கள் பர்மா பஜார் அகதிகள் வைத்திருக்கிற கடைகளைப் பற்றிச் சொல்லிய காரணத்தினால் அங்கே ஒரு அசாதாரணமான நிலைமை இருக்கிறது. அவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வியாபாரிகளாக இருக்கிற காரணத்தினால் பணம் கொடுக்கல், வாங்கல் செய்பவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பர்மா வியாபாரிகள் பற்றி ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் அதன் மீது பேசவேண்டியதில்லை. எடுத்துக் கொள்வதைப் பற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : அகதிகள் கடைகளை அங்கேயிருந்து எடுத்துவிடுவார்கள் என்ற கருத்தில் மாண்புமிகு அரிஜன நலத் துறை அமைச்சரவர்கள் சொல்லிய காரணத்தினால் கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்பட்டு அவர்கள் வியாபாரம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அருள்கூர்ந்து வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகையினாலே இதை வலியுறுத்திச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கே. எம். சுப்பிரமணியம் எழுந்தார்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் பதில் சொல்லி முடித்து விடுகிறேன். திரு. லத்தீப் அவர்கள் பர்மாவிலிருந்து வந்து வியாபாரம் நடத்துகிற தோழர்களுக்கு ஏற்படுகிற அவதி குறித்துச் சொன்னார்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்றாலும் கூட, அன்றைக்கு தாழ்த்தப் பட்டோர் நலத் துறை அமைச்சரவர்கள் பதிலைச் சுட்டிக்காட்டி அதன் காரணமாக அங்கு வாழ்கிற, வியாபாரம் செய்கிற அந்த மக்களுக்குப் பெரிய இடர்ப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தோ அல்லது அரசைப் பொறுத்தோ எடுக்கப்படுகிற எந்த நடவடிக்கையும்

அவர்களை அவதிக்குள்ளாக்குகிற அளவிற்கு அமையாமல் நிச்சயமாகப் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பிரச்னையை நீங்கள் சொல்லுங்கள்.

(ஈ) சென்னை நகர் சேரிவாழ் மக்களுக்கு அளிக்கப்படும் பஞ்ச நிவாரணம் குறித்து

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I have also given notice of a motion about the distribution of famine relief to slum dwellers in Madras particularly in Thyagarayanagar area. There it has been indiscriminately done and there are still more than 500 families who have not received the relief. They are expecting to receive the relief every day and they are disappointed. I want to know what action does the Government propose to take. Every day they are marching to the Tahsildar's office and they are told to come tomorrow, tomorrow, tomorrow. Even day before yesterday, some people were sent back like that. I only want to know what action the Government proposes to take, because there have been indicriminate distribution, bad distribution and some grants have been distributed wrongly. I want to know what action the Government proposed to take in this matter.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நல்ல காரியங்கள் அல்லது நிவாரணங்கள் அல்லது உதவிகள் இவைகளை அரசு செய்கிற நேரத்தில் அதைப் பாராட்ட முடியாவிட்டாலும் அதில் ஏதோ தவறு இருக்கிறது என்று எடுத்துச் சொல்வதன் மூலம் அரசின் முயற்சிகளுக்கு ஊறு விளைவிப்பதற்குச் சில பேர் பிரயத்தனப்படுகிறார்கள். அந்த வகையைச் சேர்ந்தது தியாகராய நகரில் உள்ள பிரச்னையாகும். உள்ளபடியே பாரபட்சமான காரியம் நடைபெற்றிருக்குமானால் நிச்சயமாக அரசு கவனிக்கத் தவறாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்படாதவர்களும், எந்த விதமான கஷ்டத்திற்கு உள்ளாகாதவர்களும் தங்களுக்கு உதவி தேவை என்று முறையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அவசரப்பட்டு பாதிக்கப்படாதவர்களுக்கு அரசாங்கம் பணத்தை அள்ளி வழங்கத் தயாராக இல்லை. எனினும் பரிசீலிக்கப்படும்.